முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1305

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

26.04.2023, புதன்கிழமை

1. ஞானபலங்கொண்ட அரங்கனே
ஞானிகள் துணைகொண்ட தேசிகனே
தானதர்ம சக்தியாய் உலகமெல்லாம்
தக்கபடி வரமாக அருளாக வலம்வருகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 13ம் நாள், 26.04.2023, புதன்கிழமை)
ஆசிதந்து உலகோரை மீட்க அரங்கன் உன்னை
ஆறுமுகன்யான் வாசிவென்று சக்திகள் கூட்டி இனிதே
3. வல்லமையாக நித்தம்நித்தம் வரம்தந்து ஆறுமுகன்
ஆறுமுகன்யான் வழிநடத்தி வர
வள்ளலே உன்மார்க்கம் உலகை ஆளும்
வரமென உன்தர்மம் உலகை வெல்லும்
4. வெல்லுமப்பா அரங்கன் நீசொல்லும் வேதங்களாக வினவிடுவேன் உபதேசங்கள் அனைத்தும்
வல்லமைபடகூடி உலகோரை வழிநடத்தி இனிதே அழியாமை என்கின்ற மகாசக்திக்கு
ஆற்றல்பட அழைத்துச்சென்று அவரவரும் அய்யமற நிலை உயர
அகிலத்தில் ஞானிகளாக அருள்புரியும்
5. ஆகவே அரங்கன்வழி உலகமக்கள் வர
அனைவருக்கும் அழியாமை உறுதியாகி
வகைபட அரங்கன்வழி ஞானிகளாக
வையகத்தார் சிறந்து ஞானபலம் பெறக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–